Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 24-11-1945 கார்த்திகை மீ 9உ { மலர் 7

## திருவரங்கத்தில் நாகமுத்து—பட்டம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம்

### மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படும்படி ஜோடி ஜோடியாக இருக்கவேண்டும்

———‡———

## பெரியார் சொற்பொழிவு

திருவரங்கம் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தோழர் பி. நாகமுத்து அவர்கட்கும் தோழியர் பட்டம்மா அவர்கட்கும் 18-11-45ம் தேதியன்று திருவரங்கத்தில் சீர்திருத்த முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள்.

இத்திருமண விழாவில் தலைமை வகிக்க பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஈரோட்டிலிருந்து திருவரங்கம் வந்திருந்தார். அவரை மிக உற்சாகமாக வரவேற்று அழைத்துச் சென்றார்கள்.

சரியாக 10 மணிக்கு மண விழா ஆரம்பமாயிற்று. மணப்பந்தலிலும், வெளியிலும் ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடி இருந்தார்கள். பெரியார் அவர்கள் தலைமைவகித்து முன்னுரையாக, சீர்திருத்த மணத்தின் சிறப்பைப் பற்றிப் பேசிய பின் மணமக்கள் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்கள். மணமக்களுக்குப் பல சங்கங்களின் சார்பாக மலர் மாலையும், பரிசுகளும் வழங்கினார்கள். பின் தோழர்கள் டி. பி. வேதாசலம், குழந்தைய்யா, வக்கீல் நடராஜன், ஜனார்த்தனம் முதலியவர்கள் மணமக்களைப் பாராட்டியும், சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்வதின் சிறப்புப் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்கள். பின் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் முடிவுரையாகப் பேசும்போது கூறியதாவது.

### பெரியார் சொற்பொழிவு

மணமக்களே! தோழர்களே! தாய்மார்களே! [illegible] நடைபெற்ற [illegible] மணத்தில் என்னைத் தலைமைவகிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு நன்றி. இப்போது நடைபெற்ற மணத்தைப் பார்த்தீர்கள். இங்கு இப்போது பல தோழர்கள் விரிவுரை ஆற்றியதையும் கேட்டீர்கள்.

### காலத்திற்கேற்ற மாறுதல் வேண்டும்

இந்தத் திருமணம் புதிதாக சு. ம. காரர்களால் புகுத்தப்பட்டதாகக் கருதுகிறார்கள். அது தவறு. காலத்திற்குத் தகுந்தாற்போல் எல்லாக் காரியங்களும் மாறுவது போல் திருமண முறைகளும் மாறி நடந்து வருகிறது. இந்தக் காலம் அறிவுக் காலம் அறிவு விருத்தி அடைய, அடைய எல்லாக் காரியங்களும் அறிவுக்குப் பொருந்தும் முறையில் மாறி வருகின்றன. அம்மாதிரி மாறுதல்கள் நடைபெறுவதற்கு ஒரு தலைவரோ, ஒரு கட்சியோ, ஒருவர் யோசனையோ, ஒரு பிரசாரமோ தேவையில்லை. தானாகவே மாறி வரும். உதாரணமாக இன்று மக்களின் வாழ்கை முறையில் நாகரீகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகிறது. அது பிரசாரத்தாலா? இல்லை. அறிவு விசாலமடைந்ததாலும் மாறுதலில் உள்ள ஆசையாலுமாகும். நகை விஷயத்திலும், உடை விஷயத்திலும், தலைமயிர் விஷயத்திலும் இப்போது ஆண், பெண்களிடம் எவ்வளவு மாறுதலைப் பார்க்கிறோம். 30, 40 வருடங்களுக்கு இம்மாதிரி கூட்டங்களில் பார்த்தால் இன்று இருப்பது போல கிராப் தலையைப் பார்க்க முடியாது. 100-க்கு 2 பேர் தவிர பாக்கிப் பேர் தலையில் முடி இருக்கும். இப்போது அப்படியல்ல. 100-க்கு 90 பேர் கிராப்புடன்தான் இருக்கிறார்கள். முடி வைத்திருப்பவர்களைக் கர்நாடகம் என்று கேலி செய்யும் நிலையும் ஏற்பட்டு விட்டது.

### தலை முடியில் மாறுதல்

இது சுயமரியாதைக்காரன் பிரசாரத்தால் அல்ல. கால மாறுபாட்டாலும், அறிவு விருத்தியாலும் அக்கம்பக்க சம்மந்தத்தாலுமேயாகும். சுமார் 25 வருடங்களுக்கு முன் நடந்த ஒரு விஷயத்தை உங்களுக்கு உதாரணம் தருகிறேன். எங்கள் ஊர் ஹைஸ்கூல் ஒன்றில் காரியதரிசியாக ஒருவர் இருந்தார். அவர் முடி வைத்திருந்தார். அவரிடம் மாணவர்கள் சம்பளம் முதலியவைகளில் சலுகை பெறப்போனால் கிராப்பை எடுத்துவிடும்படி கூறுவார். ஆனால் நாளாவட்டத்தில் அவரே முடியை எடுத்து கிராப் வெட்டியதோடு, தனது பெண் குழந்தைக்கும் கிராப் வெட்டினார். இது எதனால் என்கிறீர்கள். இது கால மாறுதலால் என்றுதான் கூற வேண்டும்.

### ரவிக்கையில் மாறுதல்

50, 60 வருடங்களுக்கு முன் ரவிக்கையே அனேகம் பெண்கள் போடுவதில்லை. பின்சிறிது சிறிதாக அப்பழக்கம் ஏற்படலாயிற்று. முதலில் தோளுக்குமேல் ரவிக்கை இருக்கிறது. பின் முழங்கைக்குக் கீழ் வந்தது. பின் பழையபடி தோளுக்குமேல் போனது. இனி என்ன வாகுமோ தெரியாது. மற்றும் இப்போது வயதான கிழவிகளும், "விதவைகளும்" ரவிக்கை போடவேண்டியதாயிற்று இல்லாவிட்டால் நாகரீகமில்லை. இந்த மாறுதல்களெல்லாம் காலமாறுபாட்டால் ஏற்படுபவைகள் தான். நான் இவைகளையெல்லாம் ஒரு விளையாட்டுக்காகவோ, கேலிக்காகவோ, கூறவில்லை. மாறுதல் வேண்டும் என்பதற்காகவும், அது இயற்கை என்பதற்காகவும், அது நடந்துதான் தீரும் என்பதற்கு ஆகவும் தான் கூறுகிறேன்.

இம்மாதிரி மாறுதல்கள் ஏற்பட்டு வரும்போது பண்டிதர்கள் தொல்லை ஒன்றும் இருந்து வருகிறது. இம்மாதிரி சமயங்களில் பழமையை அவர்கள் [illegible]றார்கள். அது அவசியமில்லை

தாது. இப்போது நடக்கும் ஒரு காரியத்திற்கு பழங்காலத்தில் இருந்தது என்று என் கூறவேண்டும். அந்தக் காலம், வேறு இந்தக்காலம் வேறு அன்றைய மனிதர்கள் அறிவு வேறு இன்றைய மனிதர்கள் - அறிவு வேறு முன் காலத்தில் மனிதன் இரவில் இருட்டில் வாழ்ந்தான் பின் வெளிச்சத்திற்குச் சக்கிமுக்கிக் கல்லை உடயோகித்தான். அதன் பின் தீவிட்டி, பின் முறையாகப் பல மாறுதல்கள் வந்து ஒரு பொத்தானை அமுக்கினால் ஒரு ஊர் முழுதும் வெளிச்சம் இனி என்னென்ன மாறுதல்கள் ஏற்படுமோ தெரியாது முன்பு சண்டையில் ஒருஒரு ஆளாகக் கொல்லத்தான் முடியும் இப்போது ஒரு ஊரையே அழித்து 5 லட்சம் பேரை ஒரே தடவையில் கொல்லலாம்.

### குழந்தைக்காக மணமா?

எனக்கு முன் பேசியவர்கள் குழந்தை பெற்று இன்பவாழ்க்கை வாழவே இம்மாதிரி மணம் செய்துகொள்வது என்று சொன்னார்கள். அப்படியானால் மணம் வேண்டாம். இப்போது மேல்நாடுகளில் ஊசி போடுவது மூலம் குழந்தை பெறச் செய்கிறார்கள்.

ஆகையால் இனி குழந்தைக்காகத் திருமணமோ, ஒரு ஆள் சேர்க்கையோ தேவையில்லை. திருமணம் செய்து கொள்வது குழந்தை பெற என்று கூறினால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இன்பத்திற்காக, வாழ்க்கை சவுக்கியத்திற்காக என்றால் ஒப்புக்கொள்ளுகிறேன்.

குழந்தை எதற்கு என்றால் சரியாகப் பதில் சொல்லுவதில்லை. சிலர் குழந்தை குடும்ப வளர்ச்சிக்கும், சொத்திற்கும் என்று கூறுகிறார்கள். சொத்து வைத்திருப்பது என்று ஒரு முறை இருந்தால் தானே! தனிப்பட்டவர்களுக்குச்சொத்து உரிமை என்பது இல்லாவிட்டால் குழந்தை ஏன்.

### தாலிகட்டுவது அடிமைப்படுத்துவதற்கு

இன்னும் சிலர் மோட்சத்திற்குப் போக எள்ளுந் தண்ணீர் இறைக்க குழந்தை தேவை என்று கூறுகிறார்கள். மோட்சம் என்று ஒன்று இருந்தால் தானே அதுவும் தேவை. மோட்சம் என்பதே இல்லாது போனால் பின் என்செய்வது? மற்றும்இன்பத்திற்காக மனைவியா சொத்திற்காக மனைவியா என்று சிந்திப்பதில்லை. இன்பத்திற்காக மனைவி என்று யாரும் கருதுவதில்லை. மனைவியை ஒரு அடிமைப் பொருளாகக் கருதுகிறார்களே தவிர ஒரு இன்பப் பொருளாக எண்ணுவதில்லை; வைப்பாட்டியைத்தான் இன்பப்பொருளாக எண்ணுகிறார்கள். பெண்களுக்கு திருமணத்தின் பேரால் தாலிகட்டி ஆண்களின் இஷ்டப்படி நடப்பதற்காக அவர்களை அடிமைப்படுத்துகிறார்கள். இது தான் 100க்கு 99 திருமணத்தின் பலன் தாலி அதற்குத்தான் பயன்படுகிறது. அதை மத சின்னம் என்கிறார்கள், ஆம் மதம் மனைவியை அடிமை என்றுதான் சொல்லுகிறது. அந்தமதம் விடப்பட்டால் தாலி ஏன்? மணமானவன் என்று தெரிந்துகொள்ள தாலிகட்டுவது என்று கூறுகிறார்கள். ஆனால் ஆண்கள் கல்யாணம் ஆனவர் என்று தெரிந்து கொள்ள அவர்கள்கழுத்திலும் தாலிகட்ட வேண்டாமா? இதில் ஆண்களுக்கு மட்டும் விலக்கு ஏன்? இந்தத் தாலியினால் தான் பெண்களைப் பல வழிகளிலும் இம்சை செய்து வருகிறார்கள். ஒரு சிறு சண்டை வந்தாலும் நான் தாலி கட்டியிருக்கிறேன் என் சொற்படி கேட்கவேண்டும் என்று ஆண் கூறுகிறான், அல்லது தாலி அறுத்து கொடுத்துவிட்டுப் போ என்று தாலியை அறுத்துக் கொண்டு ஓட்டுகிறார்கள். பெண்களும் தாலியை எஜமானன் கட்டியது என்று கருதுகிறார்கள். ஆண்கள் சம்பாதித்துப் போடுவதால் அவர்களுக்கு அடிமையாக இருந்து வரவேண்டுமென்று ஆண்கள் சொல்கிறார்கள். அவர்கள் சம்பாதித்தால், பெண்கள் ருசியாக சமைத்துப் போடுகிறார்கள். வேண்டுமானால் ஆண்கள் சமைக்கட்டும். பெண்கள் சம்பாதிக்கப் போகட்டும்.

40 வருடங்கட்கு முன்பு பர்மாவில் பெண்களிடம் ஆண்கள் அடிமைப்பட்டு பெண்கள் சொல்படி நடந்து வந்தார்கள். காரணம் பெண்கள் சம்பாதித்து வந்தார்கள். நமது பண்டிதர்கள், "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்கிறார்கள். அப்படி எங்கே நடைபெறுகிறது. காதல் எங்கே எதனால் வருகிறது? கடவுளுக்கும் காதலுக்கும் பேதம் இல்லை என்கிறார்கள் ஆம் நிசம் தான் இரண்டும் பிரட்டுத் தானே?

நமது பெண்களுக்குக் காதல் என்பது இன்னது என்று தெரியுமா? பக்தி என்பது போல் தானே? அவர்கள் வெளியுலகில் நடப்பதை அறிந்துகொள்ள விடுகிறோமா? அவர்களைப் படிக்க வைக்கிறோமா வீட்டினுள் பூட்டி அடைத்து வைக்கிறோமே தவிர சுதந்திரமாக இருந்து அவர்கள் உரிமையை அவர்கள் அடையுமாறு செய்வதில்லை. இன்று நமது பெண்களை தாங்களே தங்களுக்குக் காதலர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி சொன்னால் அவர்களால் முடியுமா என்று கேட்கிறேன். அப்படித் தேர்ந்தெடுத்தாலும் வேசம் போட்டு ஆடும் நாடகக்காரனைத்தான் காதலிக்கக்கூடும். பின் வேஷம் கலைத்து முகத்தைப் பார்த்த பின் ஏமாறவேண்டியதுதான்.

இன்றைய திருமணத்தில் பல மாறுதல்களைக் கண்டோம் இன்னும் பல மாறுதல்கள் செய்யவேண்டும். நமது பெண்கள் நகைப் பைத்தியத்தை ஒழிக்க வேண்டும் ஆபாசமாக உடம்பு முழுதும் போட்டுக் கொள்ளுகிறார்கள். இந்த நகையினாலேயே அவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள முடிவதில்லை.

இதுபோது பெண்கள் நன்மைக்காகவே இந்துமத சீர்திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. அதைப்பலர் எதிர்க்கிறார்கள். அந்தச் சட்டத்தினால் பெண்களுக்குப் பலநன்மைகளிருக்கின்றன.

அந்தச்சட்டம் நிறைவேறினால் இன்றைய பெண்ணடிமை நீங்க வழியேற்படும். திருமணங்களில் பார்ப்பானை நீக்கவேண்டுமென்று கூறிவருவது பார்ப்பனர்மீது பொறாமையாலல்ல. அவர்களுக்கு வரும்படியைக் குறைக்கவல்ல, அவன் நம்மை கேவலமாக—இழிவாக அடிமையாக—நினைக்கிறான். அப்படி இழிவுபடுத்தும் ஒருவனை நமது காரியங்களில் பங்குபெற ஏன் செய்யவேண்டும்.

### தாரை வார்த்தல் புரட்டு

இன்னும் பார்ப்பான் செய்யும் திருமணங்களில் பெண்களை இழிவு செய்கிறான். பாருங்கள் தாரை வார்த்தல், கன்னிகாதானம் செய்தல் என்ற மந்திரம் செய்கிறான். இதன் அர்த்தம் என்ன? பெண்களைத் தாய் தந்தையர்கள் தானம் செய்துவிட்டார்கள். அவர்களை எப்படி நடத்தினாலும் கேட்க ஒருவருக்கும் உரிமை கிடையாது என்பது தான் அர்த்தம். அதற்கு உதாரணம் வேண்டுமானால் அரிச்சந்திரன் மனைவியைக் கடனுக்காக விற்றதும், மனைவியை ஆசைப்பட்டுக் கேட்ட பரதேசிப் பார்ப்பனனிடம் அனுப்புவதும் எதைக் காட்டுகிறது. பெண்களும் "கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்" என்ற குருட்டு எண்ணத்தை புகட்டி வருகிறார்கள். அதன்படியே பெண்களும் நடக்கிறார்கள். குடிகாரனாக இருந்தாலும் சரி, குஷ்டரோகியாய் இருந்தாலும் சரி அவனிடமே வாழ்க்கை நடத்தவேண்டும். இம்மாதிரி குறைகள் மாறவேண்டுமென்று கூறிவருவதுதான் எங்கள் வேலை. இன்று நடைபெற்ற திருமணத்தால் பெண்களுக்கு அதிர்ப்தி இருக்கலாம். காரணம் நெருப்பு இல்லை. பட்டப்பகலில் விளக்கில்லை, பானை சட்டிகளில்லை, நெருப்பில் நெய் ஊற்றவில்லை என்பதாலேயேயாகும். நான் இங்குள்ள தாய்மார்களைக் கேட்கிறேன் நெருப்பு, மணம் நடைபெறும் இடத்தில் ஏன்? அது இருக்கவேண்டியது சமையல் வீட்டில் அடுப்பில். அது தெரியாமல் மணம் நடைபெறும் இடத்தில் வைத்துப் புகை போட்டு மணத்திற்கு வந்தவர்களைக் கஷ்டத்திற்குள்ளாக்குவதா? பானை சட்டி வீட்டிற்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# கேட்டாயா தம்பி ஒரு சங்கதி?

## என்ன? அண்ணா?

அண்ணன்:- நீயும் பார்க்கிரையே எங்கே பார்த்தாலும் எப்பப் பார்த்தாலும் எதாவது ஒரு பாப்பான்சமஸ்கிருதம்படி, வேதம் படி, ஈதைபடி என்று சொன்ன வண்ணமாக இருக்கிறார்களே ஐகோர்ட் ஜட்ஜி பிடரல் கோர்ட் ஜட்ஜியில் ஆரம்பித்து கவர்னர் ஆலோசகர், ஐ. சி. எஸ். அதிகாரி, திவான்கள், வக்கீல்கள், அரசியல் வாதிகள், ஏன்? ஜாதிபேதம் "இல்லாத "ஆச்சாரியார், கல்கி, வ. ரா. முதலிய ஆச்சார சீர்திருத்த வேஷக்காரர் வரையில், தேசீயப் பத்திரிகை, கம்யூனிஸ்ட், பைசாஷ்டா டிஸ்ட், வக்கீல் குமாஸ்தா டிஸ்ட், புரோகித டிஸ்ட், அர்ச்சக டிஸ்ட், கலை டிஸ்ட், இரசிகர் டிஸ்ட்கள், பி. ஸ்ரீ. வரை, மற்றும் ஜாதியும் இல்லை மதமுமில்லை என்கின்ற சுத்தானந்த பாரதி கூட்டம், அரவிந்தகோஷ்டி உள்பட இன்னும் வெளியூரில் இருந்துவரும் முன்ஷி, சாப்ருக்கள் கூட இதே வேலையாய் இருந்துவருகிறார்களே நீயும் பார்க்கிறேயே நம்மவர்கள் அம்பேத்கார் தவிர யாராவது ஏதாவது பேச்சுமூச்சு விடுகிறார்களா?

தம்பி:-என் அண்ணா! நம்மவர்களும் பலர் இதையே சொல்லுகிறார்களே, நீங்கள் சரியாகக் கவனித்ததில்லைபோல் தெரிகிறது.

சிதம்பரநாத முதலியார், கல்யாணசுந்தர முதலியார், டி. எம். நாராயணசாமி பிள்ளை, பி, டி. ராஜன் போன்றவர்கள் இராமாயணம் படிக்கச் சொல்லுகிறார்கள். ராஜமன்னார் போன்றவர்கள் மற்றும் தேசீயக் கவி ராமலிங்கம் போன்றவர்கள் பிரபல புராணப் பிரசங்கி கிருபாநந்தவாரிதி போன்றவர்கள்கூட இதையே சொல்லுவதோடு இதன் விளக்கங்களான பாரதம், ராமாயணம், பெரிய புராணம், தேவாரம், பிரபந்தம் முதலியவைகளைப் பிரசாரம் செய்து கொண்டும் மக்களைப் பார்த்து அதன் ரசத்தை அனுபவிக்கச் சொல்லிக்கொண்டும் அவைகளைப் படிக்க ஆசையூட்டிக் கொண்டும் தானே இருக்கிறார்கள். எலக்ஷன் பிரசாரத்தில்கூட இவைகளைக் காப்பாற்றுவதாகவும் சொல்லிக் கொண்டும் தானே இருக்கிறார்கள். இன்டர் நேஷனல் பிகர் ஆர். கே. எஸ். கூட ராமாயணத்தில் ரசம் இருக்கிறது என்கிறார். ஆதலால் நம்மவர்களில் யாரும் இவற்றின் பெருமையை அறியவில்லை என்று கருதிவிடாதீர்கள்.

அண்ணன்:- அதுதான் தம்பி நானும் சொல்லுகிறேன், நம்மவர்களும், அதையே சொல்லுகிறார்களே ஒழிய நமக்கும் அதற்கும் என்ன சம்மந்தம்? நமக்கு அவை அதாவது சமஸ்கிருதம், வேதம், ஈதை ஆகியவைகள் எதற்கு. அதனால் பயன் என்ன? என்பவைகள் பற்றி யாராவது சிந்திக்கிறார்களா என்று கேட்கிறேன்.

தம்பி:- சிந்திக்காவிட்டால் போகிறார்கள் நமக்கு அதைப் பற்றிக் கவலை என்ன?

அண்ணன்:- கவலை இல்லை என்பது சரிதான். நம்மவர்கள் இத்தனை பேர் தங்களை நான்பிராமின் என்று சொல்லி இப்படிப் பேசி பார்ப்பனருக்குத் தாசனாய் இருக்கிறார்களே தவிர எந்தப் பார்ப்பனராவது குறள்படி, கபிலர்படி, சித்தர்படி, திருமூலர்படி, என்பதாக ஏதாவது ஒரு பேச்சுப் பேசுகிறார்களா?

அப்படி இருக்க நமக்கு மாத்திரம் ஏன் இப்படிப்பட்ட அதாவது அவர்கள் உயர்வுக்கும், நம் இழிவுக்கும் பயன்படுவதை ஆதரிக்கும் புத்தி இருக்கவேண்டும்?

தம்பி:- அப்படி ஏன் அண்ணா, நம்மையும் பார்ப்பானையும் பிரித்து பேசுகிறீர்கள். நாம் யாவருமே அவர்கள்பிள்ளைகள்தானே. அவர்கள் சொத்தில் மாத்திரம் நமக்குப் பங்கு இல்லையே தவிர நம்மசொத்து அவர்களது சொத்து ஆகும். அவர்கள் படிக்கச் சொன்னதும் ஆதாரங்களும் அதையே சொல்லுகின்றன. நம்மவர்களும் அவைகளைப் பின்பற்றுகிறார்கள். எனவே நாம் யாவருமே சூத்திரர்கள் என்கிற முறையில் அவர்களுக்கு பிள்ளைகள் ஆகிறோம். அப்படியிருக்க அவர்கள் சொல்லுவதைத்தானே நாம் சொல்லவேண்டும். பிராமணன் சூத்திரன் என்றால் என்ன. தகப்பன்—மகன் என்றுதானே அருத்தம். அப்பா அல்லது சாமி, அதை மறுக்கவோ எதிர்க்கவோ வேண்டுமானால் முதலில் நாம் நம் சூத்திரப் பட்டத்தை—வருணத்தன்மையை—வருணத்தைக்கொண்ட மதத்தை, வருணத்தைச் சொல்லும் ஆதாரத்தை, வருணத்தைப் படைத்த கடவுளை இவ்வளவு சங்கதிகளை மறுத்தால் தானே நாம் சமஸ்கிருதம், வேதம், சாஸ்திரம், ஈதை ஆகியவைகளை மறுக்க முடியும்? ஆதலால் குல முறை, வருண முறை, தலைமுறைப்படி செய்கிறார் நம்மவர்கள். அதை ஏன் நீங்கள் தப்பு என்கிறீர்கள்.

அண்ணன்:- நான் அதற்குச் சொல்லவில்லை. அவர்கள் (பார்ப்பனர்கள்) ஜாக்கிரதையையும், தைரியத்தையும் பார். நம் ஏமாந்ததனத்தையும், இழிதன்மையையும் பார் என்பதற்கு ஆக இதைச் சொன்னேன். பார்ப்பான் மீது குற்றமில்லை தம்பி! நமக்கு எப்போது மானம் வரும் என்பதற்கு ஆக உன்னை யோசிக்கச் சொன்னேன்.

தம்பி:- இது உன்னாலாகிற காரியமல்ல. இஸ்லாமோ, கிருஸ்தவமோ எதாவது செய்தால் செய்யக்கூடுமே ஒழிய நீ பேசுவது வெறும் வாய் வலிக்குத்தான் உதவும். உன் பேச்சை பிராமண புத்திரன் எவனும் கேட்கமாட்டான்.

அண்ணன்:- சரி நாசமாப் போகட்டும். நான் போகிறேன்,

---

திண்டிவனம் தோழர் குப்புசாமி ஆச்சாரியவர்கள் செப்டம்பர் மாதம் இயற்கை எய்தியதை முன்னிட்டு குடி அரசு இதழுக்கு அவரது குடும்பத்தாரால் ரூபாய் இரண்டு நன்கொடையளிக்கப் பட்டது.

## திருமணங்கள்

சோளவந்தானில் 9-9-45ல் சிற்றம்பலம் செட்டியார் குமாரன் தோழர் கோபாலனுக்கும், மல்லணம்பட்டி, சுப்பஞ்செட்டியார் குமாரி தெய்வயானைக்கும் தோழர் ராமநாதஞ் செட்டியார் தலைமையில்நடந்த சீர்திருத்த மணத்தையொட்டி 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

மதுரை டவுனில் 24-10-45ல் தோழர் பண்டிட் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற தோழர்கள் ஆ. மீனாட்சிசுந்தரம் காளியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தில் தோழர் கே. வி. அழகிரிசாமி பேசினார். தோழர் முத்திருளாண்டி நன்றி கூறினார். குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

மதுரை கீழமாசிவீதி தோழர் வெ. தி. அருணாசல நாடாருக்கும், அருப்புக்கோட்டை தோழர் வாழவந்த நாடார் புதல்வி மீனாட்சி அம்மாளுக்கும் தோழர் பழனிச்சாமி தலைமையில் திருமணம் நடைபெற்றதின் நினைவாக குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

கும்பகோணம் வாண்டுவாஞ்சேரியில் 19-10-45ல் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்ற தோழர்கள் வி. சின்னையன், ஜானகி வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

விருதுநகரில் 19-10-45-ல் தோழர் முத்திருளாண்டி தலைமையில் நிகழ்ந்த தோழர்கள் கந்தசாமி, காசி அம்மாள் திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு" திராவிடநாட்டுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

நெல்லை மாவட்ட மேலப்பாளையம் கிராமம், கருங்குளத்தில் 11-11-45 மாலை தோழர் எஸ். முத்தையாவுக்கும், ஷையூர் தோழர் இலட்சுமிக்கும் சீர்திருத்தத் திருமணம் தோழர் கே. எஸ். சண்முகம் தலைமையில் நடைபெற்றது. "குடி அரசு"க்கு 1 ரு நன்கொடை தரப்பட்டது.

---

### சட்டக்கல்லூரியில் காங்கரசின் சீரழிவு!

சென்னை, நவ. 14—

தியாகராய நகரிலுள்ள சட்டக்கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் சொற்போர்க் கூட்டம் திரு. வி. கலியாணசுந்தரனார் தலைமையில் 9-11-45 மாலை நடைபெற்றது. அது போது "காங்கரசின் இன்றைய போக்கு நாட்டின் நன்மைக்கு உகந்ததல்ல" என்ற பொருள் பற்றி மாணவர்கள் ஒட்டியும் வெட்டியும் பேசினார்கள். இறுதியில் சாதகமாக அதிக ஓட்டுகள் கணக்கெடுக்கப்பட்டதால் தீர்மானம் நிறைவேறியதாகத் தலைவரால் அறிவிக்கப்பட்டது. தலைவர் தமது முடிவுரையில் 1942 ஆகஸ்ட் கிளர்ச்சி ஒரு புரட்சியாகாது என்று குறிப்பிட்டார்.

## சென்னை 16-வது சுயமரியாதை மாநாடு

### சிவாஜி நாடகம் (15-12-45)


டிக்கட்டுகள் கீழ்கண்ட இடங்களில் விற்பனையாகின்றன

மாநாடு: ரு. 1-0-0. அணா 4. நாடகம்: 10 ரூபாய் நன்கொடைக்கு மட்டும் பிரத்யேக இடம். ரு. 5-8-0, 2-4-0, 1-2-0, 0-9-0.

(1) சீனி. வெங்கடசாமி, 59 காரணீஸ்வரர் கோயில் தெரு, மயிலாப்பூர். (2) ஆர். பி. செம்பியன், 23 பழனியம்மன் கோயில் தெரு, திருவல்லிக்கேணி. (3) எஸ். இராமசாமி, 7 கிருஷ்ணப்பசெட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை. (4) எஸ். டி. எம். பழனிச்சாமி, 6 இராமர்தெரு, புரசை. (5) சி. தங்கராஜ், 41 குக்ஸ் ரோட், ஓட்டேரி. (6) டாலுஸ்டோர், மைசூர் கபே எதிரில், (7) கே. கோவிந்தசாமி, டிக் அவஸ் நைசியப்ப நாயக்கர் தெரு, பி. டி. (8) செல்லம் சன்ஸ் தேவராஜ முதலி தெரு. (9) எ. எஸ். ராமன், 39 கார்பொரேஷன் மார்க்கட், சைதாப்பேட்டை. (10) டி. மகாதேவன் கீபூன் மார்ட், சவுமநாயகி தங்கசாலை. (11) பாண்டியன் டிராபி, 22 எம். வி. ரோட் வண்ணை. (12) என் எம். சுப்பிரமணியம், 50 நாராயணப்ப நாயக்கன்தெரு, வண்ணை. (13) பி. எ. கே. பழனிச்சாமி, 20 கிரேஸ் கார்டன் 3வது சந்து இராயபுரம். (14) எஸ். ஆர். சாண்டோ, நங்கைநல்லூர்பேட்டைத் திராவிடர் கழகத்தலைவர். (15) எஸ். வி. கணேசன், 8 சிறுவள்ளூர்புரம் தெரு, பெரம்பூர். (16) பி. எஸ். மணி தாங்கல், திருவொற்றியூர்.

குறிப்பு:—வெளியூர் தோழர்கள் டிக்கட்டுகளுக்கு—என். வி. நடராசன், 18 பெருமாள் முதலி தெரு, பெத்துநாயக்கன்பேட்டை, ஜி. டி. மதராஸ் என்ற முகவரிக்கு எழுதவும். டிக்கட்டுகளுக்கு உடனே முந்துங்கள்.

பி. எ. கே. பழனிச்சாமி, விளம்பர அதிகாரி.





80-வருட அனுபவம்

1872ஆம் முதல் ஆங்கில மருந்து முறையும் இணைப்பு

குரு மருந்துகள்

பர்மா, சிலோன், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலும், இந்திய வட மாகாணங்களிலும் சிறப்புற்றவை.



(CHILDREN'S HEALTH SET)

குழந்தைகள் பாதுகாப்புக்கு

1-செட் 7-மருந்துகள்

1. குரு கோரோஜனை மாத்திரை 0-12-0
2. குரு கஸ்தூரி மாத்திரை 0-12-0
3. குரு பாலர் வயிற்றோட்ட மருந்து 0-14-0
4. குரு வேப்பெண்ணை தைலம் 1-4-0
5. குரு K. சொட்டு மருந்து (சக்குவானுக்கு) 2-0-0
6. குருஜீமா களிம்பு(கரப்பானுக்கு) 1-0-0
7. குரு பாலர் டானிக் 2-0-0

(வி. பி. பி. பிரத்தியேகம்)

விபரங்களுக்கு:—

டாக்டர்

எ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்து சாலை..........

திருச்சிராப்பள்ளி (S. I.)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## நடக்க இருப்பவை!

● திருப்பத்தூரில் டிசம்பர் 2, 3 தேதிகளில் ஜனாப் எம். முகம்மது இஸ்மாயில் சாகிப் தலைமையில் இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா முஸ்லிம் லீக் மாநாடு நடைபெறும்.

● 28-11-45 புதன்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை பார்க் டவுன் பொம்முசெட்டித் தெரு 11 வது எண் மாடியில் சென்னை நகர திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

● 2-12-45 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி அபிபுல்லா தெரு தலைவர் இல்லத்தில் தோழர் ஏ. சி. பாலசுந்தரம் பி. ஏ. எல். டி. தலைமையில் திராவிடர் கழகச் செயற் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

● 2-12-45 மாலை 3 மணிக்கு நெல்லை திராவிடர் கழக நிலையத்தில் நெல்லை நகர் திராவிடர் கழக முதலாவது ஆண்டு விழா நடத்த ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

● 2-12-45 மாலை 6 மணிக்கு திண்டிவனம் திராவிட இளைஞர் கழக தொடக்க விழா இராமதல் சௌக்கில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், இளம்வழுதி ஆகியோர் பேசுவார்கள்.

● 30-12-45 ஞாயிறன்று திருப்பத்தூர் திராவிட மாணவர் கழக ஆண்டுவிழா தளபதி சி. என். ஏ. தலைமையில் நடைபெறும். இயக்கத் தோழர்கள் பலர் கலந்துகொள்வார்கள்.

● 25-11-45-ல் அய்யம்பேட்டை திராவிடர் கழகக் கூட்டம் தோழர் எஸ். செந்திருவேல் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஏ. கே. பாட்சா முதலியோர் பேசுவார்கள்.

### தங்கவயல் தன்மானத் தோழர்களுக்கு!

தோழர்களே! இன்று நம் சமூக இழிவுகளைப் போக்க அமைக்கப்பட்டுள்ள கறுப்பு சட்டைப் படையில் சேர விரும்புவோர் கீழ்க்கண்ட எங்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
கே. ஜி. சின்னராசன்
டி. கே. சின்னதுரை
கே. என். இராசகோபால்.

### திருத்தம்

சென்றவாரம் வெளிவந்த "எஸ். ஐ. எல். எப். கூட்டம் சிரசாசனத்தில் முடிந்தது" என்ற செய்தியில் அண்ணாமலைப் பிள்ளை என்றிருப்பதை, சிதம்பரம் தண்டபாணிபிள்ளை என்று திருத்திக் கொள்ளவும்.

### வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழக முதல் மாநாடு

நடக்குமிடம்:- திருவத்திபுரம், (வ. ஆ.)

9-12-45 ஞாயிற்றுக்கிழமை

தலைவர்: தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., பி. எல்.,

கொடி ஏற்றுபவர்: பெரியார் ஈ. வெ. ரா:

வரவேற்பாளர்: தோழர் சி. வே. சுப்பராயன்

திறப்பாளர்: தோழர் ஆதிலட்சுமி அம்மையார்

திராவிடநாடு படத்திறப்பாளர்: தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

புரட்சிக் கவிஞர் படத்திறப்பு: தோழர் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்)

மா. பூ. சுப்பிரமணியன் படத்திறப்பு: சேலம், குகை ஜெகதீசன்

வித்வான் த. குருநாதன் படத்திறப்பு:

தோழர் கே. வி. அழகிரிசாமி.

(கறுப்பு சட்டைத் தொண்டர் படையில் சேர விரும்புவோர் மாநாட்டு அமைப்பாளருக்கு எழுதவும். வெளியூர்த் தோழர்களுக்கு உணவு வசதி உண்டு. மாலை பொதுக்கூட்டமும் நடைபெறும்)

### கோவை மாவட்ட திராவிடர் கழகம் ஈரோடு

டிசம்பர் முதல் வாரத்தில் கோவை மாவட்ட திராவிடர் கழக 2-வது ஆண்டு விழா ஈரோடு சரஸ்வதி ஹாலில் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆக்க வேலைகள் நடைபெறுகின்றன.

செயலாளர்கள்
P. பழனிச்சாமி, S. R. சந்திரவம்.

### திருத்துறைப்பூண்டியில்!

25-9-45 செவ்வாய் மாலை 5-மணிக்கு குடந்தைக் கல்லூரித் தோழர் செயராமன் தலைமையில் திராவிட மாணவர் கழகத்தின் உறுப்பினர் கூட்டம் நடைபெற்று நடைமுறை ஆண்டிற்குத் தோழர்கள் அரங்கண்ணல் தலைவராகவும், நாக. தியாகராசன் துணைத் தலைவராகவும், தி. ரா. நடராசன் செயலாளராகவும், மணி துணைச் செயலாளராகவும், திருஞானசம்பந்தம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மற்றும் அறுவர் அடங்கிய செயற் குழுவும் அமைக்கப்பெற்றது.

24-10-45-ல் திராவிட மாணவர் கழகத்தின் சார்பில் தோழர் எஸ். கருணானந்தம் தலைமையில் ஒரு மாணவர் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் நடராசன், மணி ஆகியவர்கள் முறையே கணைக்காலன், கோவலன் என்று தங்கள் பெயர்களை மாற்றியமைத்துக் கொண்டனர். நடக்க இருக்கும் மாகாண மாநாட்டிற்குத் தோழர் அரங்கண்ணலை பிரதிநிதியாக அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது.


மலேயாவிலுள்ள ஒரு அதிகாரியிடமிருந்து கிடைத்த
7-10-45ந் தேதி கடிதத்தில் காணப்படும் குறிப்புகள்:
"வேறு எதையும் விட நமக்கு மிகவும் தேவையானது
"சௌகரியங்கள்"—மிக அவசரமாக!
இந்தத் தேவையைத்தான்

**மே. த. கவர்னரின்**

கஷ்ட நிவாரண சகாய நிதி
பூர்த்திசெய்ய முயற்சிக்கிறது. அதற்கு உதவி
அவசரமாக தேவை.
எனவே
★
"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு
"ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் கஷ்ட நிவாரண சகாயநிதி,
C/o இம்பீரியல் பாங்க், இந்தியா" என்ற விலாசத்துக்கு
தயவு செய்து பணம் அனுப்பி உதவுங்கள்.

குடி அரசு

1945-ஷ் நவம்பர் மீ 24-உ

# தேசிய பத்திரிகைகள்

சேலம், திருச்சி ஜஸ்டிஸ்கட்சி மாகாண மாநாட்டுத் தீர்மானங்களை அனுசரித்து இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் அபேட்சகர் நிறுத்தப்படவில்லை என்பதாக ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பலதடவை தெரியப்படுத்தி இருந்தும் பத்திரிகைகாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் தெரியப்படுத்தி இருந்தும் யாரோ அபேட்சகராக நிற்கும் பேர்வழி தன்னை 'ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்' என்று சொல்லிக்கொள்வதும், அவருக்கு வேலை செய்யும் ஆட்களும் "ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று ஓட்டர்களிடம் ஓட்டுக் கேட்பதும் மிகவும் நாணயமற்றதும், யோக்கியப் பொறுப்பற்றதுமான காரியம் என்று சொல்ல வேண்டி இருப்பதற்கு வருந்துகிறோம்.

அபேட்சகர்கள் தாங்கள் வெற்றி பெறவோ அல்லது வேறு பயன்பெறவோ இப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்பட்டாலும் தேசியப் பத்திரிகைக்காரர்கள் என்றும் பொதுவாய் நடக்கிறவர்கள் என்றும், உரிமை பாராட்டிக்கொள்ளுகிறவர்களும் இம்மாதிரி கீழ்த்தர முறையை கையாளுவது மிகவும் வெறுக்கத்தக்க காரியமாகும். ஏனெனில் இந்த மாகாணத்தில் உள்ள பத்திரிகைகாரர்கள் அத்தனைபேருக்கும் ஜஸ்டிஸ்கட்சி என்பது என்ன? அது எது? பொது மக்கள் ஆதரவும் ஒழுங்குமுறையானதும் உண்மையானதுமான ஜஸ்டிஸ்கட்சியின் பேரால் அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்களா? என்பதும் தெரிந்திருக்க வேண்டியசேதியாகும். ஏனெனில் சேலம் மாநாட்டை இப்பத்திரிகை நிருபர்கள் வந்து பார்வையிட்டு அதைத் தங்கள் நிருபர்களால் அனுப்பிய சேதி என்னும் பேரால் இப்பத்திரிக்கைகள் வெளியாக்கி இருக்கின்றன. அப்படி வெளியாக்கிவிட்டு அப்பத்திரிக்கைகளே இப்போது இப்படிச் செய்வது அதாவது, யாரோ ஒருவரை 'ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்" என்று எழுதுவது ஒழுங்கா? நாணயமா? பத்திரிக்கை நீதியா? அல்லது வீரமா? மானமா? என்று கேட்கவேண்டியிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களை நிறுத்தினாலும் "இப்படிப்பட்ட அபேட்சகர்களையா நிறுத்துவார்கள்" என்கின்ற பகுத்தறிவுகூட இல்லாமல் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர் என்று சொல்வது எவ்வளவு மடமை அல்லது தவறான காரியம் என்போம். ஆகவே இனியாவது தேசீயப் பத்திரிக்கைகள் என்பவைகள் நாணயமாகவும் யோக்கியமாகவும் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

தேசீயப் பத்திரிக்கைகள் என்பவைகள் தங்கள் கட்சி நடவடிக்கைகளிலேயே எப்படி நடந்து கொள்ளுகின்றன என்பதைப் பார்க்கும் போது தேசீயப் பத்திரிக்கைகள் மாத்திரமென்ன? அசோசியேட் பிரஸ் என்னும் சேதி விற்கும் காரியாலயப் பத்திரிகை தர்மமே யோக்கியப் பொறுப்பில்லாமல் இருக்கின்றது என்று சொல்லும்போதும் கட்சிபேதம் மாத்திரமல்லாமல் ஜாதி, இன, பேதமும் வெறுப்பும், இயற்கையிலேயே சூட்சிகரமாய் நடந்து கொள்ளவேண்டிய மத, தர்மத்தைக்கொண்ட துவேஷமும் மத்தியில் இருக்கும்போது அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் நேர்மையாய் நடந்துகொள்ள முடியும் என்று யார்தான் சொல்லமுடியும். திருப்பரங்குன்றத்தில் நடந்த காங்கரஸ் ஊழியர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய சேதிகளில் தேசிய பத்திரிகைகளின் தில்லுமுல்லுகளைப்பற்றி நன்றாய் ஒன்றை ஒன்று வெளிப்படுத்திக் கொண்டுவிட்டன என்பதோடு அசோசியேட் பிரஸ் யோக்கியதையையும் வெளியாக்கப்பட்டு விட்டது.

"திருடர்கள் திருடும் போது— ஒற்றுமையாய் கட்டுப்பாடாய் திருடினாலும் திருட்டு சொத்தைப் பங்கு போட்டுக் கொள்வதில் தகராறு வந்தால் கட்டுப்பாடு ஒற்றுமை எல்லாம் பறந்து போவதோடு திருட்டும் வெளியாக்கப்பட்டு விடும்" என்பதாக ஒரு அனுபவ, அறிவு வாக்கியமுண்டு. அதுபோல் பத்திரிக்கைகளின் யோக்கியதை அசோசியேட்பிரஸ் சேதியின் தன்மை ஆகியவை திருப்பரங்குன்ற நிகழ்ச்சிகளில் ஊரார் அறிய திறக்கப்பட்டு விட்டது. என்றால் இப்பத்திரிக்கைகள் எதிரிகள் விஷயங்களில் எப்படி நடந்து கொண்டிருக்கும் என்பது பற்றி அறிஞர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். என்றாலும் பத்திரிக்கையை படிப்பதை—பத்திரிக்கையில் வருவதை—வந்ததாகச் சொல்லப்படுவதை நம்புவதை விட வேறு விஷயம் தெரிந்து கொள்ள முடியாத மக்கள் ஏமாந்துபோக இவை பயன்பட்டு விடுகின்றன. ஆகையால் சென்னை தேசியப் பத்திரிகைகள் என்பவைகளும் அசோசியேட்பிரஸ் என்பதும் இனியாவது சிறிது உண்மையில் நேர்மையில் லட்சியம் வைத்து இம்மாதிரியான மனதறிந்த, கூடாத காரியம் செய்யாமல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்னையில் காங்கரசார் ஜெயித்தால் தங்கள் ஜெயிப்புக்கு ஒரு இழிவு வரக்கூடாது என்று கருதியே எதிர் அபேட்சகரின் தனிப்பட்ட பெயர் சொல்லாமல் ஒரு கட்சியின் பெயரைச்சொல்லி "ஜஸ்டிஸ்" கட்சியோடு போட்டி போட்டு ஜெயித்தோம்" என்று பொய்யான பெருமை பாராட்டிக் கொள்ளவே இப்படிப்பட்ட சூட்சி செய்கின்றன என்றே கருதுகிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியார்கள் தேர்தல் முறை ஒழுங்கில்லை, தொகுதி முறை ஒழுங்கில்லை, ஓட்டர் முறை ஒழுங்கில்லை, சர்க்கார் தன்மை நேர்மையில்லை, என்பதாகவும், மற்றும் சில முக்கிய குறைபாடுகளையும் சொல்லி தேர்தலைப் பஹிஷ்கரித்து இருக்கிறார்கள். இது எல்லாப் பத்திரிகைக்காரர்களுக்கும் தெரிந்த சங்கதி ஆகும். எல்லாப் பத்திரிக்கைகளும் பிரசுரித்ததாகும். அப்படி இருக்க இப்பத்திரிக்கைகள் "ஜஸ்டிஸ்கட்சியார் தேர்தலில் அபேட்சகரை நிறுத்தி போட்டி போடுகிறார்கள்" என்பதாகவும், மக்கள்

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மத முள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

நினைக்கும்படி சேதிகளைப் பிரசுரிப்பதால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு நேரிடும் கெடுதியைக் கருதியே இவை எழுதுகிறோமே தவிர மற்றபடி யாரையும் குறைகூறுவதற்கு ஆக இதை எழுதவில்லை. ஆதலால் இதைப் பற்றி யாரும் சங்கடப்படாமல் ஜஸ்டிஸ் கட்சிக்கு தங்களால் ஒழுங்கு முறை ஒழுக்க முறை தவறிய கெடுதி செய்யாமல் இருக்க வேண்டுமென்றே எதிர் பார்க்கிறோம்.

தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முந்தியாவது சென்னையில் உள்ள ஜஸ்டிஸ் கிளைச் சங்கத்தார் "ஜஸ்டிஸ் கட்சியார் M. L. A. (சென்றல்) எலக்ஷனுக்கு அபேட்சகர்களை நிறுத்தவில்லை" என்பதாக சுவரொட்டி விளம்பரங்கள் ஒட்டி பத்திரிக்கைக்காரர்கள் அபேட்சகர்கள் ஆகியவர்களின் புரட்டை வெளியாக்கி பாமர மக்கள் நம்மை குற்றம் கூறாமலும், ஏமாந்து போகாமலும் இருக்கும்படி செய்வார்கள் என்று கருதுகிறோம்.

முடிவாக ஒன்று சொல்லுகிறோம் காங்கரஸ்காரர்கள் பிரிட்டிஷாரை வெளியாக்கப் பாடுபடுகிறார்கள் என்பதாக நாம் கருதி, அதற்குஆக காங்கரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போகட்டும் என்று மகிழ்ந்து நம் கக்ஷி (ஜஸ்டிஸ்கட்சியார்) தேர்தலில் விலகி இருக்கிறார்கள் என்பதுஆக தோழர் ஆச்சாரியார் சொன்னதுபோல் நாம் கருதவும் இல்லை; நம்பவும் இல்லை. காங்கிரசார் சட்டசபைக்குப் போவதின் கருத்து பிரிட்டிஷாரை இந்த நாட்டில் நிரந்தரமாய் நிறுத்தி வைக்கவும் அதற்குஆக காங்கரசாரும் (பார்ப்பனர்களும்) பிரிட்டிஷாருடன் ஒரு ஒப்பந்தம்செய்து கொள்ளவுமேயாகும். அதற்கு பாத்தியம் கொண்டாடுவதற்கு ஆகவே தாங்கள் சட்டசபையில் ஜெயித்தோம் என்று சொல்லுவதற்கு ஆகவே தேர்தலில் நிற்கிறார்கள்.

நாம் இதை (இந்த ஒப்பந்தத்தை) வலிமையாய் எதிர்ப்பதற்குஆகவே சட்டசபையைப் பஹிஷ்கரித்திருக்கிறோம். அதாவது இந்த நாட்டுப் பிரதிநிதித்துவ உரிமைக்கு அறிகுறி சட்டசபைத் தேர்தலில் ஜயிப்பது அல்ல என்று காட்டுவதற்கும், அதை (சட்டசபைத் தேர்தலில்) உரிமை காட்டும் அடையாளம் என்று நாம் கருதவில்லை என்றும், அதனாலேயே நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றும், காட்டுவதற்கே பஹிஷ்கரிக்கிறோம் என்கின்றோம்.

இப்படி இருக்க சட்டசபைத் தேர்தலை ஒப்புக்கொண்டு, தேர்தலுக்கு நின்று, ஓட்டர்களையும், பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கத் தகுதி உள்ளவர்கள் என்று ஒப்புக்கொண்டு, அவர்கள் வாசல் சென்று ஓட்டும் கேட்டுவிட்டுத் தோல்வி அடைந்த பின்பு சட்டசபைத் தேர்தல் பிரதிநிதித்துவத்திற்கு அடையாளமாகாது என்றால் அதில் அறிவுடைமையோ, நாணயமோ இருக்காது என்று கருதியே பஹிஷ்கரித்திருக்கிறோம் என்பதை மக்கள் உணர வேண்டுகிறோம்.

---

## இ. தே. ராணுவமும் நாசவேலையும்

இந்திய தேசிய இராணுவத்தின் மீது சர்க்காரால் நடத்தப்படுகிற நடத்தையை ஆதரிக்கிறவர்கள் இந்த நாட்டில் எந்தத் திராவிடரும் இருக்கமாட்டார் என்றே கருதுகிறோம்.

ஆனால் அதன் பேரால் நடைபெறும் ஒரு கூட்டத்தாரால் நடத்தப்படும் நாசவேலை, காலித்தனம், மக்களைக் கட்டாயப்படுத்திக் கடை அடைக்கச் செய்வது-பள்ளிப் பிள்ளைகள் பள்ளிகளுக்குப் போகவிடாமல் தடுப்பது மக்கள் உயிரிழக்கச் செய்து, பண்டங்களை அழிப்பது முதலிய காரியங்களை ஆதரிப்பது வெறியர் வேலை என்றே கருதுகிறோம்.

கலவரம் வேண்டாம், குழப்பம் வேண்டாம், பலாத்காரம் வேண்டாம், தனிப்பட்டவர்களைத் தனி சொந்தக் காரணம் கொண்டு தாக்க வேண்டாம் என்றெல்லாம் எல்லா கட்சித் தலைவர்களும் மக்களுக்கு எடுத்துச்சொல்லிகட்சிக்கு கட்சி இருந்துவரும் வெறுப்பையும் துவேஷத்தையும் குறைப்பதற்கு ஆக முயற்சிக்கிற காலத்தில் இப்படி ஒரு கூட்டம் தலைவிரித்து ஆடினால் அதை கண்டித்து இனியும் அப்படி நடக்காமல் தடுக்க முயற்சி செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது. மதுரை நாசவேலைகளாலும் பலாத்காரக் காரியங்களாலும் சர்க்காரின் அஜாக்கிரதையும் தகுதிஅற்ற தன்மையையும் எடுத்துச்சொன்ன பிறகே இப்போது அவசர அவசரமாக பந்தோபஸ்து முயற்சிகள் செய்து அம்மாதிரி காரியங்களை உற்பத்தி செய்யும் கூட்டங்கள் கூட்டுவதைத் தடுத்து உத்திரவு

போட்டு வருகிறார்கள். இந்த முயற்சியை கிளர்ச்சி செய்ப நாம் குறிப்பிட்ட காலத்திலேயே சர்க்கார் எடுத்துக்கொண்டிருந்தால் மதுரையில் 3 பேர் செத்திருக்க மாட்டார்கள். 50 பேர் சிறைபிடிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். பல சொத்துக்கள் நாசமாயிருக்காது. பலருக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்காது.

உண்மையில் நாசவேலையில் துன்பம், நஷ்டம், கஷ்டம், தொல்லை அனுபவித்தவர்கள் திராவிடர்களே ஆவார்கள். பெருமை அடித்து ஜம்பம்பேசிக் கொண்டு தங்கள் நலம் அனுபவிக்கிறவர்கள் பார்ப்பனர்கள். இது எவ்வளவு இளிச்சவாய்த்தனம்?

ஆகவே காலித்தனம், குழப்பம், நாசவேலை செய்யாதவர்களோ, அவைகளை ஆதரிக்காதவர்களோ தேசிய ராணுவத்தினரின் நலனுக்கு விரோதிகள் என்று எண்ணுவதும், பேசுவதும், அறிவில்லாமையும், அல்லது விஷமத்தனமான சூட்சி என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## கிருஷ்ணன்—பாகவதர்

கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை கமிட்டியில் அங்கத்தினர்களாக இருந்து ஆதரவளிக்க ஒப்புக்கொண்டு எழுதின தோழர்களுடன் இவ்வாரம் விழுப்புரம் சேர்மென் தோழர் கோவிந்தராஜுலு நாயுடு அவர்களும் தங்களது சம்மதத்தைத் தெரிவித்து ஆவன செய்ய அருள் கூர்ந்திருக்கிறார்.

பாகவதர் தம்பி அவர்கள் பேரால் வெளியான ஒரு அறிக்கைக்கு பாகவதர் தம்பி அவர்கள் ஒரு மறுப்பு அறிவித்து இருக்கிறார்கள். அதைப் பின்னால் வெளியிடலாமென்று நிறுத்தி வைத்து இருக்கிறோம்.
மற்றபடி-

டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் தூதுகோஷ்டியில் இருக்க சம்மதப்படவில்லை என்று வெளியான சேதியின் கருத்து டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் அம்முயற்சியில் அதாவது கிருஷ்ணன்-பாகவதர் விடுதலை முயற்சியில் இறங்குவதற்கு தமக்கு இஷ்டமில்லை என்பதாகாது.
என்றும்,

அந்தக் கமிட்டிக் கூட்டத்தில் தானும் ஒருவராக இருப்பதைவிட இந்த மாதிரி தனித்தனியாக கமிட்டியும், தானும் முயற்சியும் செய்வதைவிட ஒருபொதுவான முயற்சி அவசியம் என்று கருதியதுதான் அதன் கருத்து என்றும், மற்றபடி மற்ற எவருக்கும் குறையாத அனுதாபமும் அவர்கள் விடுதலை பெறவேண்டும் என்கின்ற ஆவலும் அதற்குஆக பலன் தரத்தக்க வகையில் கூடியதைச்செய்ய ஆசையும் இருப்பதாக தக்க நண்பர் ஒருவர் நமக்குத் தெரிவித்திருக்கிறார்.

இதற்காக சென்னையில் டிசம்பர் மத்தியில் நடக்கும் கூட்டத்தில் இது சம்மந்தமாய் பொது மக்கள் என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி யோசிக்கப்படும் என்பதோடு அந்த யோசனையை கிருஷ்ணன்—பாகவதர் ஆகியவர்களையும், அவர்களது குடும்பத்தார்களையும் கலந்து ஆலோசிக்கப்படும் என்பதையும் துவக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்நாம்தெரிவித்துக்கொண்டது போலவே தக்க செல்வாக்குள்ள பிரமுகர்களுடையவும், பொது மக்கள் பிரதிநிதிகளாக, ஸ்தாபனங்களில் தலைவர்களாக இருக்கிறவர்களுடையவும், ஆதரவு இருப்பதற்கு அறிகுறியாக அப்படிப்பட்டவர்கள் விடுதலை முயற்சிக் குழுவில் (கமிட்டியில்) ஒருவராக இருப்பதற்குச் சம்மதம் பெற்று தோழர் திருச்சி வக்கீல். வேதாசலதிற்காவது, 'குடி அரசு' ஆபீசுக்காவது அனுப்பிக் கொடுக்கும்படி ஆங்காங்குள்ள தோழர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். வேறு வேறு முறையில் தனிப்பட்ட அறிக்கைகள் வெளியாவது சிறிது தாமதப்பட்டால் நலமென்று கருதி பல அறிக்கைகளை வெளியிடாததற்கு அறிக்கை அனுப்பின தோழர்கள் பொருத்தருள வேண்டுகிறோம்.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. 20-11-45ந் தேதி இரவு ஈரோட்டிலிருந்து குற்றாலவாசத்திற்குச் சென்று இருக்கிறார்கள். தோழர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி, சங்கரய்யா, மணி ஆகியவர்கள் உடன் சென்று இருக்கிறார்கள். இம்மாதம் முடிய அங்கு இருப்பார்கள்.

உடல் நலம் அதிகத் தொந்திரவு இல்லை ஆனாலும் கண்ணில் சிறு சதை வளர்ந்ததுபோல் இருக்கிறதுடன் அடிக்கடி வயிறு உப்புசமும் ஏப்பமும் உண்டாகிறது.

யாவற்றிற்கும் ஓய்வு வேண்டும் என்பதே டாக்டர் கருத்து. விலாசம்: ஈ. வெ. ராமசாமி, குற்றாலம் (தென்காசி வழி)

## தஞ்சை திராவிட வாலிபர் கழக ஆண்டு விழா!

15-11-45 வியாழன் காலை 8-30 மணிக்கு கரந்தை தமிழ்ப்பெருமன்றத்தில் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. தலைமையில் ஷை கழக முதலாவது ஆண்டு விழா நிகழ்வுற்றது. தோழர் வி. சின்னதம்பி கொடியேற்றி வைத்தார்.

தோழர்கள் எஸ். கே. சாமி, டி. கே. சீனிவாசன், கே. கே. நீலமேகம், கோ. சி. பெரியசாமிப்புலவர் ஆகியோர் முறையே பன்னீர்செல்வம், புரட்சிக் கவி பாரதிதாசன், பெரியார் ஈ. வெ. ரா., கா. சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் படங்களைத் திறந்து வைத்தார்கள். திராவிட நாட்டுப் படத்தைத் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி திறந்து வைத்தார். தோழர் என். எஸ். சண்முகவடிவேல் நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

அன்று மாலை தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் தஞ்சை ஆஸ்பத்திரி மைதானத்தில் நடைபெற்றது.

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ்கட்சிக்கு)

24-11-45 வரை சேர்ந்துள்ள

அங்கத்தினர் 34444 பேர்.

சந்தா வரவு ரூ. 3429-4-0

## கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக்கு நாடெங்கும் கூட்டங்கள்

(கீழ்க்காணும் இடங்களில் கூட்டப்பட்ட பொதுக்கூட்டங்களில் நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களையும், இசை உலக ஜோதி எம். கே. தியாகராச பாகவதர் அவர்களையும் கருணைகாட்டி விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன)

தஞ்சையில் 15-11-45ல் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., தலைமையில் நடைபெற்ற திராவிட வாலிபர் கழக ஆண்டுவிழாக் கூட்டம்.

பட்டுக்கோட்டையில் 7-11-45 தேதி தஞ்சை ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் வி. நாடிமுத்துப்பிள்ளை தலைமையில் நடந்த சர்வகட்சி பொதுக்கூட்டம்.

அரூர் விஸ்வகர்ம மகாஜன சங்கத்தின் சார்பில் 18-11-45ல் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஜனாப் ம. அஜ்ஜா பாசாயபு தலைமையில் நடந்த கூட்டம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதை சங்க சார்பில் 16-11-45ல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் நடைபெற்ற கூட்டம்.

கோபி விஸ்வகர்ம மகாஜன சங்க அழைப்பின் பேரில் பல சங்கங்கள் சார்பில் 16-11-45ல் தோழர் ஜி. பி. சேதுராமன் தலைமையில் நடந்த கூட்டம்.

திருச்சி வாகனேரி தமிழர் மன்ற ஆதரவில் 13-11-45-ல் தோழர் சோதி சஞ்சீவி தலைமையில் நடந்த கூட்டம்.

லால்குடி தாலுக்கா புதூருத்தனூர் கிராமவாசிகள் அடங்கிய தோழர் கோ. கிருஷ்ணசாமி உடையார் தலைமையில் நடந்த 16-11-45-ந் தேதி கூட்டம்.

பண்ருட்டிக்கடுத்த புதுப்பேட்டையில் 17-11-45-ல் நடைபெற்ற திராவிட இளைஞர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்.

பொறையார் நாடார் உயர்தரப் பள்ளியில் 17-11-45-ல் நடந்த பொறையார் தரங்கம்பாடிவாசிகளின் பொதுக் கூட்டம்.

கள்ளக்குறிச்சியில் 15-11-45 இரவிலிருந்து [illegible]யண செட்டியார் தலைமையில் நடைபெற்ற கூட்டம்.

தண்டராம்பட்டில் 12-11-45-ல் தோழர் சேனாபதி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டம்.

சென்னை வண்ணையம்பதி மாடசாமி நாடார் தெருவில் தோழர் சி. வி. பாண்டியன் தலைமையில் நடந்த திராவிட நடிகர் கழகத் திறப்புவிழாக் கூட்டம்.

9-11-45-ல் திருச்சி மருத்துவ நடிகர் கழக நிலையத்தில் தோழர் க. பிச்சைமுத்து தலைமையில் நடந்த பொதுக் கூட்டம்.

நாகர்கோயில் பாரதி இளைஞர் சங்கத்தில் ஐப்பசி 21-ல் தோழர் திருகூட சுந்தரம் தலைமையில் நடைபெற்ற விசேஷக் கமிட்டிக் கூட்டம்.

கல்வார்பட்டியில் 7-11-45-ல் தோழர் கே. எல். ஆர். எல். தலைமையில் நடந்த திராவிடர் கழகச் செயற் குழு கூட்டம்.

திருவல்லிக்கேணி மாவட்ட திராவிடர் கழகத்தில் 11-11-45-ல் தோழர் ஏ. சி. பாலசுந்தரம் பி. ஏ. எல். டி. தலைமையில் நடந்த கூட்டம்.

20-11-45-ல் பாபநாசத்தில் பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் ஆர். எஸ். எத்திராஜலு நாயுடு தலைமையில் நடந்த பொது மக்கள் கூட்டம்.

பொன்மலை மேலகல்கண்டார் கோட்டையில் 17-11-45-ல் தோழர் சு. கலைசன் தலைமையில் நடந்த திராவிடர் கழக பொதுக்கூட்டம்.

சேலம் பொன்னமாப்பேட்டை திராவிடர் கழக [illegible] 15-11-45 காலை தோழர் [illegible] தலைமையில் நடந்த கூட்டம்.

காவேரிப்பாக்கம் திராவிட இளைஞர் மன்றத்தின் சார்பில் 16-11-45 மாலை தோழர் அப்பாண்ட நாதன் தலைமையில் நடந்த பொது மக்கள் கூட்டம்.

திருப்பத்தூர் திராவிடர் கழகத்தின் சார்பில் 22-11-45-ல் நடைபெற்ற கூட்டம்.

சேலம் திராவிட மாணவர் கழகச் சார்பில் செவ்வாய்ப்பேட்டையில் புரட்சிக்கவி பாரதிதாசன் தலைமையில் 14-11-45 மாலை நடந்த பொதுக் கூட்டம்.

லால்குடியில் 21-11-45 மாலை தோழர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக அமைப்புக் கூட்டம்.

### மறைவு

திருவண்ணாமலை திராவிடர் கழகக் காரியதரிசியும், வடஆர்க்காடு மாவட்ட நிர்வாகக் கமிட்டி அங்கத்தினருமான இளந்தோழர் T. D. சம்புராமி அவர்கள் 4-11-45 மாலை திடீரென இயற்கை எய்தியது கேட்டு வருந்துகிறோம். அவ்வூர் திராவிடர் கழகச் சார்பில் ஒரு இரங்கற்பா வாசிக்கப்பட்டது.

புரசை கிராம வீதி தருமானந் தோழர் சு. யோகநாதன் தங்கை சதாசக்தி அம்மாள் 31-10-45 மாலை 4½ மணிக்கு இயற்கையெய்தியது கேட்டு வருந்துகிறோம்.


## "இன எழுச்சிப் பாக்கள்"

(ஆக்கியோன்:- மாவண்ண தேவராசன்)

இதைப்பற்றி வெளியாகி இருக்கும் மதிப்புரைகள்

குடி அரசு:— சிவிமர் மெட்டுக்களில் சீர்திருத்தம் வழியும் சிறந்த பாட்டுக்கள்......! கடவுள் மதம் [illegible] ஒரு நல்ல சவுக்கு!

திராவிட மணி:— ........திராவிட இன எழுச்சிக்குப் பேருதவியான பல அரிய கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது.

டாக்டர் [illegible] ஜனார்த்தனம் M. A., ......இயக்கக் கொள்கைகளை எளிய மெட்டுக்களில் அமைந்த இன எழுச்சிப் பாக்களைத் திராவிடத்திற்கு தருகிறார்........

விலை 0—3—0 தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 தபால் தலை அனுப்பவும். வியாபாரிகளுக்கு 25 % கமிஷன் தரப்படும். முன் பணம் வேண்டும்.

குறிப்பு:- இந்நூலாசிரியர் எழுதிய "நல்வினை நாணாறு" (தபால் செலவுடன் 0-3-9) எம்மிடம் கிடைக்கும்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ. ஆ.

## திராவிட நாட்டுச் செய்திகள்

பட்டுக்கோட்டை ச. ம. சங்க ஆதரவில் தீபாவளி தினத்தன்று கருப்புச் சட்டை அணிந்து கருப்புக் கொடிகளுடன் ஒரு மௌன ஊர்வலம் நடைபெற்று தீபாவளி எதிர்ப்பைக் காண்பிக்கப்பட்டது.

o o

கொளும்பு ஆதிதிராவிட இளைஞர் கழக கமிட்டிக் கூட்டம் கொள்பிட்டி காலிரோட் 324 அறையில் கூடி கழகக் கட்டிட நிதிக்கு ஒரு கதம்பக் கச்சேரி நடத்தத் தீர்மானித்துள்ளது.

o o

நாகை தன்மதிப்புக் கழக நிர்வாக்கூட்டம் 6-11-45 மாலை 7மணிக்கு தோழர் டி. கே. விசயராகவலு தலைமையில் கூடியது. சங்கவேலைகளுக்கு மாதம் ரூபாய் பத்து சம்பளம் கொடுத்து ஒருவரை நியமிப்பதென்று தீர்மானிக்கப்பட்டு மாதாந்திர கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டது.

o o

திருச்செங்கோட்டில் 5-11-45ல் நடைபெற்ற சுயமரியாதை சங்கக்கூட்டத்தில் தோழர் எஸ். கே. வரதராசலுவின் அன்னையார் சின்னம்மாள் இயற்கை எய்தியமைக்காக அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு போலி ஜஸ்டிஸ் வாதிகளின் போக்கையும் கண்டிக்கப்பட்டது.

o o


திருப்பத்தூரில் 4-11-45 காலை திருப்பத்தூர் தாலூக்கா முஸ்லீம் லீக் மாநாட்டு வரவேற்புக் கமிட்டிகூட்டம் ஜனாப் எஸ். ஷேக்முகம்மது தலைமையில் நடைபெற்றது. திருச்சி சமாசம் ஆசிரியர் முகம்மது சுல்தான் பக்தாதி மாநாடுபற்றி சொற்பொழிவாற்றினார். பல தீர்மானங்கள் நிறைவேறின.

o o

8-11-45 காலை சேலம் செவ்வாய்ப் பேட்டை தேவாங்கபுரம் ஸ்ரீராமலிங்க சவுண்டேஸ்வரியம்மன் கோவிலில் கோவிலின் மற்றொரு சாராராகிய தேவாங்க ஜன சமூக பொது மக்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி சுமார் 40 ஆதிதிராவிடத் தோழர்களை கோயிலுக்குள் பிரவேசிக்கச் செய்தார்கள்.

o o

மணக்காலில் 29-10-45 மாலை தோழர் எம். கே. இராமசாமி தலைமையில் நடந்த பெரியார் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் தோழர் சும்மான் வார் கொடியேற்றினார். தோழர் கே.வி. அழகிரிசாமி சொற்பொழிவுக்குப் பின் ம. மு. புலவர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

திக்கெட்டிலும் ஜெயக்கொடி நாட்டி நிற்கும் அற்புத மருந்து!

ஜெயராம்

### காயசுத்தி லேகியம்

இதை போட்டிபோட வேறு மருந்து கிடையாது எந்த டாக்டராயிருந்தாலும் சரி தாராளமாய் பரீட்சித்துப் பார்க்கலாம்

வாந்தி, மயக்கம், தலைவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், அசீரணம், நெஞ்செரிச்சல், வயிற்றுப்பிசம், வயிற்றுப் பிரட்டல், வயிற்றுவலி, இடுப்புவலி, குடல்வாதம், கைகால்வலி, மூலநோய், மலச்சிக்கல், கிரிமிநோய் முதலியவைகளை ஒழித்து மலர்ச்சியை அளிக்கும்.

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0. V. P. P. வேறு

நாணயப்பொறுப்புள்ள இயக்கத்தோழரில் ஏஜண்டுகள் தேவை.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.



## ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் : : கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்திரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P. O. திருச்சி


திருச்சி ஜில்லா கொளத்தூர் கிராமத்தின் கிராம முனிசீப் தோழர் அருணாசல உடையார் 11-11-45-ல் மேற்படி ஊரிலுள்ள சுமார் 50 ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்குப் படிப்பதற்காக புத்தகங்கள், நோட்டுகள் இன்னும் வேண்டிய வசதிகளைச்செய்து கொடுத்ததோடு பள்ளிக்கூடத்தையும் பார்வையிட்டு ஆதிதிராவிட மக்களை, படிப்பில் உற்சாகமூட்டினார்.

### தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

இடமின்மையாலும் பல முக்கியச் செய்திகள் வெளியிடவேண்டியிருந்ததாலும் தீபாவளி கொண்டாடாத தோழர்களின் பெயர்கள் இவ்வாரம் வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் வரும்.

### சூறாவளி!

திருமலை ராயன் பட்டினத்திலிருந்து திராவிடர் கழகத்தின் சார்பில் சூறாவளி என்ற மாதப்பத்திரிகை ஒன்று வெளியிடுவதற்கு அரிய முயற்சிகள் நடைபெறுகின்றன. விரைவில் சூறாவளி

### "சாந்தா" நாடகம் வெள்ளி விழா!

நாகை திராவிட நாடக சபையாரால் இராசீபுரம் ஓரியண்டல் தியேட்டரில் தோழர் மு. கருணாநிதி எழுதிய சாந்தா நாடகத்தின் வெள்ளி விழா 14-11-45-ல் இராசீபுரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் எம். கே. வெங்கடபதி தலைமையில் வெகு சிறப்பாக நடந்தேறியது. திராவிடர் கழகத்தார் நாடக சபையினருக்கு ஒரு விருந்தளித்தனர். நாடகத்தைப் பாராட்டி பகுத்தறிவு வாசகசாலையார், திராவிடர் கழகத்தார் சைனீக பகுத்தறிவு சங்கத்தார், தோழர்கள் ரோ. சு. அருணாசலம், எம். கே. வெங்கடபதி, சி. சுப்ரமணியம், எ. பழனியப்பன், காவேரி ஆகியோர் வெள்ளிக் கோப்பைகளும் வாழ்த்திதழ்களும் அளித்தனர். தோழர் எ. சித்தையன் நாடகத்தைப் பாராட்டி சொற்பொழிவாற்றினார். மானேஜர் தோழர் டி. ராமசாமி அனைவருக்கும் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குள் இருக்கவேண்டியதையும், சாப்பாட்டில் ஊற்றி சாப்பிடவேண்டிய நெய்யை நெருப்பில் ஊற்றுவதும் எவ்வளவு முட்டாள்த்தனம் பாருங்கள் இதற்கு ஏதாவது பொருள் இருக்கிறதா பாருங்கள். இதைச் சொன்னால் எங்களை நாஸ்திகர்கள் என்று கூறுகிறார்கள், நெய்யை நெருப்பில் ஊற்றுவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா அதற்குக் காரணம் ஏதாவது சொல்லவேண்டுமானால் "சூத்திரன்" நெய் ஊற்றிச் சாப்பிடுவதா என்பதுதானே ஒழிய வேறில்லை.

மணமக்களுக்கு ஒரு யோசனை

கடைசியாக மண மக்களுக்கு ஒரு வார்த்தை கூற ஆசைப்படுகிறேன். நீங்கள் மற்ற திருமணத் தம்பதிகளைவிடப் பொறுப்புடனும், மற்றவர்கள் பெருமை கொள்ளும்படி நடந்து கொள்ள வேண்டும். உங்களின் வாழ்க்கையைக் கண்டு மற்றவர்கள் பொறாமை கொள்ள வேண்டும். உங்கள் இருவரும் எங்கும் ஒன்றாகவே போகவேண்டும். வேலை நேரம் தவிர மற்ற நேரங்களில் நீங்களிருவரும் பிரியக் கூடாது. மற்ற தம்பதிகள் உங்களைப் பார்த்து நாமும் ஏன் சுயமரியாதைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று வருத்தப்பட வேண்டும். எங்கு பார்த்தாலும் ஜோடி, ஜோடியாகவே திரியவேண்டும்.

மற்றும் திருமணங்களில் அதிகச் செலவு செய்வதை நிறுத்தவேண்டும். சிக்கனத்தைக் கைக்கொள்ள வேண்டும். திருமணத்தில் செலவழிக்கும் பணத்தை பெண்களின் பெயரால் பாங்கியில் போட்டுவரும் வரும்படியைக் குழந்தைகள் பிறந்தால் அதைப் பராமரிக்க தாதி வைக்கவும், குழந்தைகளுக்கு உடுப்புக்காகவும் செலவழிக்கவும் செய்தால் ஆண்கள் பெண்களைக் கண்டால் பயப்படுவார்கள். சங்கீதக் கச்சேரி வைத்து வீணாக செலவு செய்வதையும் நிறுத்திவிடவேண்டும். வேண்டுமானால் இசைத்தட்டுகள் வைத்து இன்புறலாம். ஆகையால் இதையெல்லாம் உணர்ந்து தக்கபடி நடந்துகொள்ள வேண்டுகிறேன். நாங்கள் செய்துவரும் வேலை பெண்களின் உயர்வுக்கே ஆகையால் பெண்கள் எங்களை ஆதரிக்க வேண்டுகிறோம்" என்று பேசினார்.

நன்றி கூறலுடன் மணம் இனிது முடிந்தது. பிற்பகல் வந்தவர்கள் யாவருக்கும் நல்ல முறையில் விருந்து நடைபெற்றது.

---

<u>மதிப்புரை</u>

திருமகள், (புதுக்கோட்டை) அழகிய கவிதைகளும், பல கட்டுரைகளும்காணப்படுகின்றன. மாதமிருமுறை வெளிவருகிறது. விலை அணா. 4.

# தீபாவளி ஒழிந்தது!

கீழ்க்கண்ட இடங்களில் தீபாவளி திராவிடர்க் கேற்ற தல்ல என்பதை விளக்கும்பொருட்டு கூட்டங்களும் ஊர்வலங்களும், நடைபெற்றன.

நிகழ்ச்சிகள் கீழே!

ஒரத்தநாட்டில் 3-11-45-ல் தோழர் க. சாமி அய்யா தலைமையில் கறுப்புக் கொடி மௌன ஊர்வலம் நடைபெற்று பொதுக் கூட்டத்தில் தோழர் சந்திரசேகரன் பேசினார்.

4-11-45 தோழர் சபாபதி செட்டியார் தலைமையில் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

• •

முத்துப்பேட்டையில் 2-11-45 மாலை 5 மணிக்கு தோழர் ஆர். சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீபாவளியைக் கண்டித்தும், இந்துமத பரிபாலன போர்டு திருத்தச் சட்டத்தை வரவேற்றும் ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் நடமாடும் சில போலிகளின் தேர்தல் பிரச்சாரத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின. 3-11-45ல் ஒரு கருப்புக்கொடி மௌன ஊர்வலமும் நடைபெற்றது.

• •

பம்பாய் தாராவியில் 28-10-45 ஞாயிறு மாலை திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தாரால் தோழர் எஸ். கன்னையா தலைமையில் நடத்த கூட்டத்தில் தோழர்கள் எஸ். டி. சவரிதாசன், எஸ். சுப்பையா, எஸ். பி. சுந்தரவேல், சே. எஸ், பாலகிருஷ்ணன், கே. எஸ். பாலையா ஆகியவர்கள் பேசியபின் தோழர் வாணுவாமலை புது உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

• •

மண்டபம்கேம்ப், அண்ணாதுரை பகுத்தறிவுக் கழகத்தின் சார்பில் தீபாவளியன்று கறுப்பு உடைதரித்த ஊர்வலம் நடைபெற்று அன்றுமாலை தோழர் சண்முகம் தலைமையில் நடந்த எதிர்ப்புக்கூட்டத்தில் தோழர்கள் அழகிரி, கோதண்டபாணி, எஸ். என். சுப்பையா முதலியோர் பேசினார்கள்.

• •

காரைக்கால் திராவிடர் கழக சார்பில் தீபாவளியன்று கறுப்பு சின்னம் அணிந்து பல தோழர்கள் தீபாவளி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார்கள்.

• •

மதுரையில் தீபாவளியன்று காலை தோழர் சத்தியேந்திரன் தலைமையில் ஒரு எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றதோடு, ஊர்வலமும் நடைபெற்று தோழர் மதிவாணன் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆரிய பொம்மைக்குத் தீ வைக்கப்பட்டது. மாலையில் ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நான்கு மாசி வீதிகளையும் சுற்றி கீழ்மார்க்கட்டில் தோழர் ராசமான் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நீலநாராயணன், சத்தியேந்திரன், செங்குட்டுவன், மதிவாணன், இராமானுசம் ஆகியோர் பேசினார்கள்.

• •

கடலூரில் 3-11-45-ல் பகுத்தறிவுக் கழகத்தில் நடைபெற்ற தீபாவளி கண்டனக் கூட்டத்தில் தோழர்கள் இளங்கோ, கிருட்டினமூர்த்தி ஆகியோர் பேசினர். பல தோழர்கள் கறுப்பு சட்டை அணிந்தனர்.

o o

4-11-45 மாலை திருப்பாபுலியூர் திராவிட இளைஞர் கழகத்தில் தோழர் அறிவழகன் தலைமையில்நடந்த தீபாவளி எதிர்ப்புக் கூட்டத்தில் தோழர்கள் திராவிடமணி பி. ஏ., பாண்டுரங்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

• •

அருப்புக்கோட்டையில் 3-11-45-ந் தேதி மாலையில் (50-க்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்ட) மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. தீபாவளி ஒழிக என பெண்கள் ஒலி கிளப்பினர். தோழர் ஆ. சொக்கலிங்க பாண்டியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் எஸ். எஸ். பழனிசாமி, டி. கே. சுப்ரமணியன், எம். எஸ். ராமசாமி ஆகியோர் பேசினார்கள்.

• •

சின்னசேலம் தென்செட்டி பந்தல் அம்மன் சாவடிக்கு முன் 2-11-45ல் தோழர் முத்துஇராமரெட்டியார் தலைமையில் நிகழ்ந்த தீபாவளிக் கண்டனக் கூட்டத்தில் தோழர் புலவர் ஆர். எழில் நிலவன் சொற்பொழிவாற்றினார்.

o o

பொன்மலையில் சுமார் 500 திராவிடத் தோழர்கள் தீபாவளியன்று கறுப்புச் சின்னம் அணிந்து தீபாவளியை பகிஷ்கரித்தார்கள்.

• •

புவனகிரி சுயமரியாதைத் தோழர்கள் தீபாவளியன்று கறுப்பு சட்டைப் படை அணிந்து கறுப்புக் கொடியேந்தி வீதிகள் தோறும் சுற்றி தீபாவளியைப் பகிஷ்காரம் செய்தார்கள்

• •

பண்ருட்டியில் 3-11-45 மாலை தோழர் கூத்தன் தலைமையில் நடைபெற்ற தீபாவளி கண்டனக் கூட்டத்தில் பல தோழர்கள் பேசினார்கள்.

• •

கணேசபுரத்தில் 30-10-45-ல் தோழர் கனகராசு தலைமையில் நடந்த கூட்டத்தில் தீபாவளிப் பண்டிகையின் இழிவு பற்றி தோழர் தொல்காப்பியனார் பேசினார்.

• •

எடப்பாடியில் 3-11-45 மாலை ஒரு கறுப்புக்கொடி ஊர்வலம் நடைபெற்

றது. ஆடிட்டர் தோழர் கந்தசாமி பி. ஏ., தலைமையில் தோழர் ப. கண்ணன் தீபாவளி என் ஒழியவேண்டுமென்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்.

•

கரூர் காமாட்சி அம்மன்கோயில் தெருவில் 3-11-45 மாலை தோழர் கோபால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கணபதி, ஆசிரியர் வேலாயும், பி. கே. அய்யா ஆகியோர் தீபாவளியின் தீது என்பதுபற்றி பேசினர். கறுப்பு உடைத் தொண்டர் ஊர்வலமும் நடைபெற்றது.

• •

சென்னை ஜூனியர்ஸ் டிபேட்டிங் சொசைட்டியின் சார்பில் 3-11-45-ல் பிரம்ம சமாஜத்தில் நடைபெற்ற தீபாவளி மறுப்புக் கூட்டத்தில் தோழர் அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) சொற்பொழிவாற்றினார்.

• •

திருச்சி ஒட்டகுடியில் 1-11-45-ல் தோழர் எஸ். முத்தையன் தலைமையில் நடந்த தீபாவளி கண்டனக் கூட்டத்தில் தோழர் இளங்கோவன் முதலியோர் பேசினர்.

• •

திருச்சி ஜில்லா சுயமரியாதைச் சங்கம், திராவிட இளைஞர் கழகம் இவற்றின் சார்பில் 1-11-45-ல் தோழர் சொக்கலிங்கம் தலைமையில் நடந்த தீபாவளி திராகரிப்புக் கூட்டத்தில் தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசினர். அன்று மாலை கறுப்புக் கொடி ஊர்வலமும் சிறப்பாக நடைபெற்றது. பல தோழர்கள் கறுப்புச் சின்னம் அணிந்திருந்தனர்.

• •

நிலக்கோட்டை, திராவிடர் கழகத்தின் சார்பாக தீபாவளி எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு நூற்றுக்கணக்கானவர் கொண்டாடுவதில்லையென உறுதி செய்தனர்.

• •

காரைக்குடியில் தீபாவளி தினத்தன்று திராவிடர் கழக, சுயமரியாதைத் தோழர்கள் கறுப்புத் துணிகளை அணிந்து தீபாவளியைப் பகிஷ்கரித்தனர்.

• •

தூத்துக்குடி நகர திராவிடர் கழகத்தின் ஆதரவில் 3-11-45 மாலை மேலச் சண்முகபுரத்தில் தோழர் நீதி மாணிக்கம் தலைமையில் நடந்த தீபாவளி ஒழிப்புக் கூட்டத்தில் தோழர்கள் வீரசிகாமணி, தங்கவேல், பெரியசாமி ஆகியோர் பேசினார்கள். பி. எஸ். சண்முகம் நன்றி கூறினார்.

o o

சேலம் சுயமரியாதை சங்கத்தின் சார்பில் தீபாவளிப் பண்டிகை பற்றிய வெளியீடுகள் வழங்கப்பட்டு தீபாவளியைப் பகிஷ்கரிக்கப்பட்டது.

புதுவை திராவிட இளைஞர்கள் தீபாவளி தமிழருக்கு இழுக்குதரும் என்ற கருத்தடங்கிய துண்டு வெளியீடுகளை ஆயிரக் கணக்கில் வழங்கி வெறுப்பைக் காட்டினர்.

o o

பொன்னமாப்பேட்டையில் திராவிடர் கழக சார்பில் 2-11-45-ல் தோழர் சின்னசாமி தலைமையில் தீபாவளி திராவிடர்க்கு ஆகாதென தோழர்கள் துரைராசு, சோமசுந்தரம், குழந்தைசாமி ஆகியோர் பேசினர். கந்தசாமி நன்றி கூறினார்.

---

## பூனா ஒப்பந்த எதிர்ப்புக் கூட்டங்கள்

(கீழ்க்காணும் இடங்களில் பூனா ஒப்பந்த எதிர்ப்புத் தீர்மானங்கள் வெற்றிகரமாக நிறைவேறின)

அருப்புக்கோட்டையில் 28-10-45ல் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் 7-வது மாநாடு.

o o

மூலகொத்தளம் சுப்பராயன் எலிமெண்டரி பாடசாலையில் 21-10-45 ராவ்பகதூர் என். சிவராஜ் தலைமையில் நடந்தகூட்டம்.

o o

24-10-45 சென்னை கோகலே ஹாலில் நடந்த கூட்டத்தில் ஜனாப் அப்துல். அமீத்கான், தோழர்கள் சத்யவாணிமுத்து, டாக்டர் கிருஷ்ணசாமி, சிவராஜ் ஆகியோர் பேசினர்.

o o

25-10-45 சென்னை ராயபுரம் மீனாட்சியம்மன் பேட்டையில் தோழர் எஸ். சண்முகம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் எம்.எஸ். முத்து கோபால், அமிர்தவாசகம், மீனாம்பாள் சிவராஜ் ஆகியோர் பேசினர்.

o o

26-10-45 சென்னை ஆசீர்வாதபுரத்தில் தோழர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடந்த கூட்டம்.

o o

27-10-45 சென்னை பெரம்பூரில் தோழர் மீனாம்பாள் சிவராஜ் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

28-10-45 சென்னை ராயபுரத்திலிருந்து பல முக்கிய இடங்கள் வழியாக பூனா ஒப்பந்த பிரேத ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

o o

27-10-45 காலை 10மணிக்கு துவக்கப்பட்ட ஆம்பூர் அம்பேத்கார் மைதானத்தில் நடைபெற்ற வடஆற்காடு ஜில்லா தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் தோழர்கள் சிவராஜ், சங்கரசாமி, சுப்பிரமணியம், ஆதிமூலம், சுவாமிதாஸ், வேதமுனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

o o

கோலார் தங்கவயல் சாம்பியன் ரீப்ஸ் சமரச செடியூல்டு வகுப்பார் கழகத்தின் 24-10-45ல் தேதிய பொதுக்கூட்டம்.

o o

மாயனூர் தாழ்த்தப்பட்டோர் வாலிபர் முன்னேற்றக் கழகத்தில் 22-10-45ல் நடைபெற்ற பொதுக்கூட்டம்.

o o

திண்டிவனம் இடங்கல் ஆதிதிராவிடர் சில்வர் ஜூப்ளிக் கழகத்தில் 27-10-45ல் நடந்த பொதுக்கூட்டம்.

o o

கொளும்பில் 28-10-45ல் திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்க இலங்கைக் கிளையின் சார்பாக நடைபெற்ற கூட்டம்.

o o

திருச்சி மான்பிடிமங்கலத்தில் ஷெடியூல்டு வகுப்பு இளைஞர் கழகத்தின் சார்பாக 27-10-45ல் நடைபெற்ல கூட்டம்.

o o

தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் சார்பில் 21-10-45ல் நடந்த பொதுக்கூட்டம்.

o o

பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்க ஆதரவில் தோழர் அய்யாசாமி தலைமையில் நடந்த கூட்டம்.

## மறைவு

நாசரேத் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பி. எஸ். கே. ஜெயபாலின் தந்தை தோழர் பி. எஸ். கனியப்ப நாடார் 3-11-45 இரவு இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம். இதன் நினைவாக "குடி அரசு", "திராவிட நாட்டு"க்கு முறையே 1 ரூபாய் அளிக்கப்பட்டது.

• •

காஞ்சி நமதியக்கத் தோழர் சி. வி. எம். அண்ணாமலையின் வாழ்க்கைத் துணைவியார் தனக்கோட்டி அம்மையார் 31-10-45 அன்று இயற்கை எய்தியது கேட்டு வருந்துகிறோம்.

• •

தங்கவயல் நமதியக்கத் தோழரும் "குடி அரசு" ஏஜண்டுமான தோழர் கே. பி. வரதராசன் அவர்கள் தனது 29-வது வயதில் 3-11-45 சனிக்கிழமையன்று இயற்கையெய்தியது கேட்டு வருந்துகிறோம். சுமார் 3000-க்கு மேற்பட்ட மக்கள் கொண்ட பிரேத ஊர்வலம் நடைபெற்றது.

• •

இலுப்பையூர் நமது இயக்கத் தோழர் ராம. பெருமாள் நாடார் அவர்கள் தனது 75-வது வயதில் 4-11-45 அன்று இயற்கையெய்தியது கேட்டு வருந்துகிறோம்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.